# இஸ்லாமியக்கண்ணோட்டத்தில் பாரதியின் பெண்ணியக்கருத்துக்கள்

**M.N.Nishniya musthakeema**

Student of Department of Languages, Faculty of Arts and Culture, South Eastern University of Srilanka

Nisnyworld2@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கியங்களில் முக்கிய பாடுபொருள்களில் ஒன்றாக காணப்படுவது பெண்ணியம் சார்ந்த கருத்துக்களாகும். பெண்ணியம் என்பது நவீன பெண்களை தாழ்வு படுத்தும் சமூக அரசியல் பொருளாதார நடவடிக்கைகள் கட்டமைப்புக்கள் மற்றும் சமத்துவமின்மையை எதிர்க்கும் அல்லது கவனப்படுத்தும் சமூக கலாசர அரசியல் இயக்கங்களின் செயற்பாடுகள் அல்லது கோட்பாடுகளின் தொகுப்பாகும். இது ஆண் பெண் சமத்துவத்திலும் கவனம் செலுத்தும் கோட்பாடாகும். சார்லட் பன்ச் என்பவர் ' பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளை பெற்றுத்தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றி அமைக்க முயல்வதாகும்' என்கிறார். அந்த வகையில் அடக்கி ஒடுக்கப்பட்ட அன்றைய இந்தியப் பெண்களின் நிலையால் உருவான சிந்தனைகளும் அதில் விளைந்த எதிர் மனோநிலைகளும் பாரதியின் எழுத்துக்களில் பெண்ணியக் கருத்துக்கள் தோன்றக்காரணமாயின. இக்கருத்துக்கள் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் எவ்வாறு நோக்கப்படுகின்றன என்பதனை விபரணமுறை பகுப்பாய்வுமுறை ஒப்பீட்டுமுறை ஆகிய அணுகுமுறைகளில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. இஸ்லாமிய மார்க்கம் பெண் உரிமைகளைப்பறிக்கின்றது என்ற பரவலான குற்றச்சாட்டை தகர்க்கும் முகமாக பத்தொன்பதாம் நூற்றாண்டு பிறந்த (1882-1921) பாரதியின் பெண் விடுதலைக்கருத்துக்களை கி.பி.ஏழாம் நூற்றாண்டு பிறந்த முஹம்மத் நபியின் வருகையேடு தோன்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஆராய்வதே நோக்கமாகும். அதனடிப்படையில் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு தோன்றிய பாரதியின் பெண்விடுதலைக் கருத்துக்களை காட்டினும் பதின்நான்கு நூற்றாண்டுக்கு முன்பே இஸ்லாம் சிறந்த கருத்துக்களை முன்வைத்தது மட்டுமன்றி அவை முஹம்மத் நபி மூலமாக செயற்படுத்தியும் காட்டப்பட்டன என்பதனை இவ் ஆய்வின் ஊடாக அறிய முடிகின்றது.

**திறவுச் சொற்கள்**: பெண்ணியம், இஸ்லாமியக்கண்ணோட்டம், பாரதி

**அறிமுகம்**

தமிழில் பெண்ணிலை வாதம்,பெண்ணிலை ஏற்பு எனும் பல்வேறு பதங்களில் வழங்கப்படும் இப்பெண்ணியமானது ஆங்கிலத்தில் கநஅைளைஅ என்று வழங்கபடுகிறது. இதன் பொருள் பெண்மைக்குறிய இயல்புகளை உடையவள் என்பதாகும். பெண்ணியம் என்கிறபோது பெண்களின் எல்லா சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றைக்களைய முற்படும் இயக்கமாகும். இதன் மூலம் உலக அரசியல் பண்பாடு பொருளாதாரம் ஆன்மீகம் ஆகியவற்றில் நல்ல மாற்றத்தை உருவாக்க முயல்வதாகவும் காணப்படுகின்றது.

பாரதியின் பெண்ணியக்கருத்துக்களை பாரதியின் காலத்திலிருந்து இந்தியாவின் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் அதாவது சுமார் 136 ஆண்டுகளுக்கு முன்பு 1882 தொடக்கம் 1921 வாழ்ந்த பாரதியின் காலத்தில் விதவைகள் மறுமணம் செய்வதற்கு உரிமையின்மை சதி(உடன்கட்டையேறும்) வழக்கம் பெண்களுக்கு சொத்துரிமையின்மை இந்தியாவின் சில பகுதியில் நிலவிய பெண்சிசுக்கொலை பெண்கல்வி உரிமையின்மை திருமணச்சுதந்திரமின்மை போன்ற பெண்ணடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்த பாரதி முற்போக்கான பெண்ணிய கருததுக்களை மனைத்தலைவிக்கு வாழ்த்து பெண்விடுதலை பெண்விடுதலைக்கும்மி புதுமைப்பெண் பெண்மை

போன்ற குறுகிய கவிதைகளிலும் பாஞ்சாலி சபதம் குயில்பாட்டு போன்ற கதைக்கவிதைகளிலும் சந்திரிகையின் கதை போன்ற தொடர்கதைகளினூடாகவும் பல்வேறு கட்டுரைகளின் வாயிலாகவும் 19ம்நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து எழுதியுள்ளார்.(தூரான்.பெ. பாரதி தமிழ் தொகுப்பு)

பெண் சுதந்திர கருத்துக்களை திருக்குர்ஆன்,ஹதீஸ் வாயிலாக 1300ஆண்டுகளுக்கு முன்பே புனித இஸ்லாம் மார்க்கம் வலியுறுத்தியதோடு அதனை கண்டிப்புடன் கடைபிடிக்க கட்டளையும் இட்டுள்ளது. மிகவேகமாக பரவிவரும் இஸ்லாம்மார்க்கத்தின் மீது காழ்ப்புணர்வு கொண்ட மேற்கத்தேய உலகம் இஸ்லாத்தின் எந்தஒரு கொள்கைகளிலும் குறை காணமுடியாத கட்டத்தில் தங்களின் பிராதான விமர்சனத்துக்குறிய பேசுபொருளாக 'இஸ்லாம் பெண்களுரிமைகளை பறிக்கின்றது' என்பதைக்கொண்டுள்ளது. எனவே பெண்களின் உரிமைப் பற்றி பேசிய புரட்சியாளராக இன்று வரை நம் நினைவிலிருக்கும் மகாகவி பாரதியின் கருத்துக்களோடு இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய உரிமைகளை உற்று நோக்க ஏதுவாயின.

**பெண்விடுதலைக்கருத்துக்கள் பாரதியினுள் தோன்ற ஏதுவாய் அமைந்த சூழல்**

19ம் நூற்றாண்டின் இருதிப்பகுதியிலிருந்து சிறுவயதிலேயே கவி புனையும் ஆற்றல் பெற்றிருந்த பாரதி 20ம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதிகளில் தேசிய கவியானார். விடுதலயே மூச்சாகக்கெண்டு வாழ்ந்த பாரதியின் வாழ்வில் அதுவே பிரதிபலித்தது. சூாதி, ஏற்றத்தாழ்வு,முரண்பாடுகளின்,ஓழிப்பு,வறுமை,நாட்டுப்பற்று போன்றவற்றை கருவாகக்கொண்டு எழுத்து சமைத்த பாரதியின் மற்றுமொறு பிரதான பாடுபொருள் பெண்விடுதலையாகும். இப்பெண்ணியம் பற்றிய கருதுகோள் பாரதியினுள் தோன்ற அவருக்கு முற்பட்ட மற்றும் சமகாலங்களில் நடந்த பல்வேறு அம்சங்கள் காரணமாயின.

பாரதிக்கு முற்பட்ட காலப்பகுதியில் தமிழில் முதல் நாவல் எழுதிய ச.வேதநாயகம் பிள்ளை (1826-1889) தமது கதை கட்டுரை செய்யுள்களிலும் தமிழ் நாட்டு பெண்களின் முன்னேற்றம் கல்வியிலயே தங்கியுள்ளது என வற்புறுத்தினார். அவரது பிரதாப முதலியார் சரித்திரம் மற்றும் பெண்மதி மாலை போன்ற நூல்களிலும் பெண்கல்வி பற்றிய கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. 'பெண்களுடைய கல்வியால் புருசர்களுடைய கல்வியும் அதிகரிக்குமென்பது பிரகாசமாயிருக்கிறது.எப்படியென்றால் பெண்கள் தங்களை கல்வியால் வெல்லாமலிருக்கும் பொருட்டு புருசர்களுக்கும் கல்வியில் அதிக கவனமும் முயற்சியும் உண்டாகும் என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை' (வேதநாயகம் பிள்ளை 1958:18)

இவரைப்போலே மாதவையா (1872-1925) என்ற நாவலாசிரியர் பத்மாவதி என்ற நாவலில் பெண்கல்வியை முக்கியமாக வற்புறுத்துகிறார். 'புருசனுடைய பணமும் கண்ணியமும் பெண்சாதிக்கு உதவுவது போல் அனுடைய ஞானமும் கல்வியும் அளுக்கு உதவுவதில்லை ஆதலால் அறிவை அடையும் பொருட்டு மானிடப்பிறப்பு எடுத்தவர்கள் யாவரும் கல்வி கற்க வேண்டும்'. (மாதவையா 1961:62-63)

மேலும் சிறுகதை இலக்கிய வடிவத்தின் தந்தையான வ.வே.சு.ஐயர் (1881-1925) தனது குளத்தங்கரை அரசமரம் எனும் சிறுகதையில் சீதனக்கொடுமை மற்றும் பெற்றோரின் பிடிவாதத்திற்கு பெண்ணொருத்தி பழியாவதை விபரிப்பதாக அமைந்துள்ளது. இவ்வாறு இந்தியாவில் தோன்றிய கருத்துக்களைப்போலவே அக்கால கட்டத்தில் ஈழத்திலும் சில எழுத்தாளர்கள் பெண்கல்வி மற்றும் திருமணச்சுதந்திரம் ஆகியவை குறித்து கருத்து தெரிவித்துள்ளார். முக்கியமாக தி.த.சரவணமுத்துப்பிள்ளை இயற்றிய தத்தை விடுதூது நூலில் 'கல்வி நலம் பெற்றனசேர்ந்

காரிகையார் காதலர்க்கும் சொல்லருநற் றுணையன்றே தொல்லுலகு சிறக்குமன்றோ கூட்டினிற் பசுங்கிளிபோற் கோதையரை எப்போதும் வீட்டிலடைத்து வைக்கும் விரகிலருக்குயாதுரைப்போம் பூட்டித்திடிறந்தெடுக்கும் பொருளாக் கருதினரோ'.

இவ்வாறு தமிழ் இலக்கியங்களின் தாக்கத்தை போன்றே பிற நாடுகளில் பெண் நிலமைகளில் சீர்த்திருத்தம் வேண்டி உழைத்த இயக்கங்கள் மற்றும் தனிநபர்களும் பாரதியின் சிந்தயைக்கவர்ந்தனர். 19ம் நூற்றாண்டிலிருந்து ஆசியாவின் மேற்கிலிருந்து கிழக்கு வரை பெண்ணுரிமை கோரும் இயக்கங்கள் பரவலாக தோன்றின. இவை தவிர இங்கிலாந்தில் உருவான பெண் வாக்குரிமை இயக்கத்தையும் ரஸ்ய புரட்சிக்குப்பின் பெண்கள் பெற்ற சலுகைகளையும் துருக்கியில் நடந்த பெண்ணுரிமைப் போராட்டங்களையும் பாரதி அறிந்திருந்தார். இது பற்றி தனது 'பெண்' என்ற கட்டுரையிலும் குறிப்பிட்டுள்ளார்.

இதே போல் பெண்ணுரிமை போராட்டங்களால் அவரைக்கவர்ந்த மற்றுமொரு நாடு சீனாவாகும். பெண்களின் பாதங்களை சிறுவயது முதல் கட்டிவைத்தல், வைப்பாட்டிமுறை, கட்டிருக்கமான ஒழுக்க முறைகளென அடக்குமுறைகளை பெண்கள் மீது திணித்தனர். பல சீர்திருத்தவாதிகள் இவற்றை நீக்கக்கோரி வற்புறுத்தினர். அவர்களில் ஜியூஜின் (1875-1907) என்ற சீனத்துப்பெண்ணும் ஒருவர். இவரின் பெண்ணுரிமை கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட பாரதி 'சியுசின் செய்த சொற்பொழிவு' என்றும் ''சியுசின் என்ற சீனத்து இஸ்திரியின் கதை'' என்ற கட்டுரையும் எழுதியுள்ளார்.

இவ்வாறு உலகின் பல பாகங்களிலும் பெண்ணடிமைத்தனத்துக்கு எதிராக கிளர்ந்த குரல்களும் பிரித்தானியரின் கீழிருந்து மீளமுயன்ற இந்தியாவில் மெல்லத்தோன்றிய புதிய கருத்துக்களும் புரட்சிகரமான சிந்தனைகளும் பாரதியின் எழுத்துக்களில் பெண்விடுதலைக்கருத்துக்கள் தோன்றக்காரணமாயின.

**இஸ்லாத்திற்கு முன் பெண்கள் நிலை**

கி.பி. 7ம் நூற்றாண்டிலயே முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மூலம் இஸ்லாம் பரவத்தொடங்கியது. அதற்கு முன்னைய காலகட்டத்தில் பல்வேறு சமூகத்தினரும் பெண்களை பல்வேறு வகையில் அடக்கி ஆண்டுள்ளனர் என்பது வரலாற்று உண்மை. கிரேக்கர்கள் பெண்களை வியாபாரப்பொருளாகவே கருதினர். சொத்துரிமை மற்றும் கொடுக்கல் வாங்கல் என்ற எந்த உரிமையும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. பிரபல்யமான கிரேக்க தத்துவ ஞானியான சாக்ரடிஸ் ''பெண்கள் இருப்பது உலகின் வீழ்ச்சிக்கு மூலகாரணம்'' என்றார். மேலும் பெண்கள் விச மரத்திற்கு ஒப்பானவர்கள் புற தோற்றத்தில் அழகாகவும் தன்னை சார்ந்தவர்களை அழிக்கும் குணம் படைத்தவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ரோமானியர்களோ பெண்களை உயிரற்ற பொருளாகவே கருதினர். அதனால் அவர்களிடத்தில் பெண்களுக்கு மதிப்போ உரிமையோ இருக்கவில். எனவே பெண்களை தூண்களில் கட்டியும் கொதிக்கின்ற எண்ணெயை ஊற்றியும் குதிரைகளின் வால்களில் கட்டி அவர்கள் மரணிக்கும் வரை வேகமாக ஓட்டியும் சித்திரவதை செய்தனர். இந்தியர்களோ கணவன் இறந்தவிட்டால் அவனின் சிதையுடன் சேர்த்து மனைவியையும் எரித்து விடுவர். சீனர்கள் தம் மனைவியரை விற்கவும் உயிருடன் புதைக்கவும் உரிமை பெற்றனர். பெண் சாபத்துக்குயரியவள் வேதநூலைத் தொட அருகதையற்றவள் என்று யூதரும் பெண் சைதானின் வாசலென கிறிஸ்தவரும் கருதினர். கிறிஸ்தவ அறிஞர்களில் ஒருவரான புனித பூனபெ.்ன்தூரா என்பவர் 'நீங்கள் பெண்களைக்கண்டால் அவளை மனித இனத்தை சார்ந்தவள் என்று கருதாதீர். மேலும் உயிரள்ள ஜீவனாகக்கூட கருதாதீர் மாறாக நீங்கள் காண்பது

சைதானின் உருவத்தை தான்' எனக்கூறியுள்ளார். இவ்வாறு இஸ்லாத்திற்கு முன்னர் பெண் பல்வேறு வகையில் விமர்சிக்கப்பட்டுள்ளாள்.

பிரஞ்சுக்காரர்கள் 586ஆம் ஆண்டு பெண்கள் மனித இனத்தை சார்ந்தவர்களா இல்லையா என ஆய்வு செய்து முடிவெடுக்க ஒரு சபையே அமைத்தனர். அதில் பெண்கள் மனித இனத்தைச்சார்ந்தவள் தான் எனினும் அவள் ஆண்களுக்கு பணிவிடை செய்வதற்காகவே படைக்கப்பட்டுள்ளாள் என முடிவு செய்துள்ளனர். அரேபியர்களோ பெண்களை இழிந்த பொருளாகக்கருதியது மட்டுமன்றி பெண் குழந்தைகளை உயிருடன் புதைப்பவர்களாகவும் ஒரு தந்தை இறந்தால் தாயை மகன் மணந்து உடமையாக்கும் பாவனைப்பொருளாகவும் பெண்ணை கருதினர்.(இப்ராஹிம் அன்சாரி,கட்டுரை-சர்வதேச பெண்கள் தின சிந்தனைகள்)

இவ்வனைத்து அநியாயங்களை விட்டு பெண்களை காப்பாற்றவும் ஆண்களும் பெண்களும் சமமானவர்கள் என்பதை விளக்குவதாகவுமே இஸ்லாம் அமைந்தது. இஸ்லாம் மார்க்கத்தில் ஆண்களுக்கு இருக்கும் அதே உரிமை பெண்களுக்கும் உண்டு. ''ஆண் அல்லது பெண் ஈமான் கொண்ட நிலையில் நற்கருமங்கள் செய்தால் அவர்கள் சுவனத்தில் நுழைவார்கள் சிறிதளவும் அநீதமிழைக்கப்பட மாட்டார்கள்'' (4:124) இது பெண்கள் பற்றிய இஸ்லாத்தின் சுருக்கமான கண்ணோட்டமாகும்.

**இஸ்லாமிய கண்ணோட்டத்தில் பாரதியின் கருத்து**

பாரதியார் காலத்து பெண்கள் நிலை பெண்ணுரிமை பெண்விடுதலை ஆகியன குறித்து பல்வேறு கவிதைகளும் கட்டுரைகள் மற்றும் கதைகளும் எழுதியுள்ளார். அந்த வகையில் அவற்றிலிருந்து பாரதி பெண்களது அடிப்படை உரிமைகள் எனக் கருதியவற்றை நோக்குகையில் பாரதியும் பெண்விடுதலையும்

1. கல்வியுரிமை
2. மறுமண விவாகரத்து உரிமைகள்
3. விரும்பிய தொழில் செய்யும் உரிமை
4. சொத்துரிமை
5. திருமணச் சுதந்திரம்
6. அரசியல் சுதந்திரம்

இவை பாரதியார் காலத்து இந்திய பெண்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளாகும். இவற்றை முற்போக்கான கதை எழுத்துக்களால் பாரதத்தினுள் மாற்றங்களை விதைத்தார். இதை பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டமும் சிறந்த தீர்வினைக் கொண்டுள்ளது.

**1. பெண்கல்வி**

பெண் கல்வியில் பெரிதும் நாட்டம் கொண்டிருந்த பாரதி அதற்கான முயற்சி எங்கு தொடங்கினாலும் அதனை உற்று நோக்கி வரவேற்றதோடு கல்வி அறிவு பெற்ற இந்திய பெண்களை புகழ்ந்தும் பெண்களின் கல்வி அவசியத்தையுணர்த்தியும் தம் பல கட்டுரைகளில் எழுயுள்ளார். ''எவ்வாறு நோக்கிய போதிலும் தமிழ் நாட்டு மாதர் சம்பூரணமாக விடுதலை பெற வேண்டுமெனின் அதற்கு கல்வி தோணியே பெருந்துணையாகும். எனவே கொஞ்சம் கொஞ்சமாய் பல துறைகளில்

பயிற்சி வாய்ந்திருக்கும் தமிழ் சகோதரிகள் இரவு பகலாக பாடுபட்டு அவ்வத்துறைகளில் தேர்ச்சி பெறமுயல வேண்டும்'' என இயம்பியுள்ளார்.(மகாகவி பாரதியார் கட்டுரைகள்: தமிழ் நாட்டு மாதருக்கு)

மேலும் அக்கால கட்டத்தில் பெண் கல்வி மறுக்கப்பட்டதுடன் பெண் கல்வி கற்பது தீமையென்றும் கருதப்பட்டது. பெண்கள் விடுதலையடைந்ததாக கற்பனை செய்து பாரதி பாடிய பெண்கள் விடுதலை கும்மி பாடலில்

''ஏட்டையும் பெண்கள் தொடுவது

தீமையென் றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்

வீட்டுக் குள்ளே பெண்ணைப்

பூட்டி வைப்போம் என்ற

விந்தை

மனிதரும் தலை கவிழ்ந்தார்''

இதில் அன்றைய காலகட்டத்தில் பெண்கல்வி தொடர்பான அடக்குமுறைகளையும் அவர்களை வட்புறுத்தி தன் பலன் பெற முயற்சித்த மனிதர்கள் பற்றியும் குறிப்பிட்டு அதிலிருந்து வெளியே வர பெண்களை எத்தனிக்கத்தூண்டுவதாகவும் அமைந்துள்ளது. பாரதியின் மற்றுமொரு பெண்ணியக்கவிதையான புதுமைப்பெண் எனும் கவிதையில்

''சாத்திரங்கள் பலபல கற்பராம்

சவுரியங்கள் பலபல செய்வராம்

மூத்த பொய்கள் யாவும் அழிப்பராம்

மூடகட்டுக்கள் யாவும் தகர்ப்பராம்''

என்பதினூடாக பாரதி காணத்துடித்த புதுமைப்பெண்ணின் இலட்சணங்களாக சிறந்த கல்வியினை கற்பது மட்டுமன்றி அவற்றை தம் வாழ்விலும் கடைபிடித்து ஒழுகக்கூடியவளாக இருக்கவேண்டுமென கூறுகின்றார். ''அமிழ்ந்து பேரிருளாம் அறியாமையில் அவலமெய்திக் கலையின்றி வாழ்வதை உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறமாகும்'' என கல்வியறிவற்ற வாழ்வை பெண்கள் தாமாகவே எடுத்தெறிய வேண்டுமென உணர்ச்சி வேகத்துடன் பாடினார். ''பெண்கள் அறிவை வளர்த்தால் வையம் பேதமை அற்றிடுமே காணீர்''. என பெண்கல்வியால் ஏற்படும் நன்மைகளையும் குறிப்பிட்டு கற்பதற்கான ஊக்கத்தை உலக மாந்தரிடையே தம் கனல் தெறிக்கும் வரிகளால் உரைத்தார் பாரதி.

பெண்களின் அடிப்படை உரிமைகளுள் ஒன்றாக பாரதியால் பார்க்கப்பட்ட இப்பெண் கல்வியை இஸ்லாமியக்கண்ணோட்டத்தில் பார்ப்போமாயின் இதனை இஸ்லாம் வலியுருத்தும் வண்ணம் வேறெந்த மாதமும் வலியுருத்தவில்லை என்றே குறிப்பிடலாம். ஆண் பெண் பராபட்டசமின்றி அனைவரையும் கல்வி கற்க தூண்டுவதோடு பாராட்டவும் செய்கிறது. இது பற்றி முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுகையில்

‘‘கல்வியைத் தேடுதல் மு∴மீனான ஆண் பெண் இருபாலாரினதும் கட்டாயக்கடமையாகும்’’ (இப்னு மாஜா)

இவ்வாறு இஸ்லாம் கற்றலை கட்டாயப்படுத்தியுள்ளதோடு வெறுமனே கற்றலோடு நின்று விடாமல் அதனை ஏனையோருக்கு பயன்டும் வகையில் நடைமுறைப்படுத்தவும் வேண்டுமென குறிப்பிடுகிறது. இதனைப்பற்றி நபியவர்கள் குறிப்பிடுகையில்

‘‘ஒருவர் மரணித்துவிட்டால் அவருடைய அனைத்து நல்லமல்களும் துண்டிக்கப்பட்டுவிடும் மூன்று விடயங்களைத்தவிர அவை 1.நிலையான தர்மம் 2.பயனளிக்கக்கூடிய அறிவு 3.தனக்காக பிரார்த்திக்கும் சிறந்த குழந்தை’’. (முஸ்லீம்)

கல்வியென்பது அறிவை வளர்ப்பதோடு தனது கடமைகள் மற்றும் தனக்குத்தேவையான ஒழுக்கங்கள் சிறந்த பண்பாடுகளை அறிவதாகும். இதில்ஆண் பெண்னென்ற எந்த வேறுபாடுமின்றி அனைவரும் சிறந்த கல்வியை நாடுவதை வரவேற்கிறது. முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் அவர்களின் மனைவியான அன்னை ஆயிஸா (ரலி) அவர்கள் சிறந்த அறிஞராக விளங்கியதோடு நபியவர்களின் வபாத்திற்கு பின்பு ஏற்பட்ட பல சிக்கலான சந்தேகங்களுக்கு சிறந்த தெளிவினை வழங்கியவராகவும் காணப்பட்டார். எனவே இஸ்லாமிய வரையறைகளோடு பெண்கள் கல்விகற்று சிறந்த கல்வியறிவு கொண்ட சமூகத்தை உருவாக்குதில் பங்குகொள்ள வேண்டுமென்பதே இஸ்லாமிய கருத்தாகும்.

**2.மறுமணம் மற்றும் விவாகரத்து உரிமைகள்**

பாரதியின் காலத்தில் மட்டுமன்றி இன்னும் விமர்சனத்தக்குள்ளாகும் ஒரு விடயமே பெண்கள் மறுமணம் மற்றும் விவாகரத்து உரிமைகள். இவை மறுக்கவும் தீவிரமாக எதிர்க்கவும் பட்ட பாரதியின் காலத்தில் அவரின் பெண் குறித்த சிந்தனையை தனது படைப்புக்களிலும் கதைமாந்தர்களிடமும் எதிரொலிக்கவிட்டார். விதவைகள் தங்கள் மரணம் வரை வருந்தி சாவதிலிருந்து வெளியேறவேண்டுமென்ற அவர் கருத்து சந்திரிகையின் கதையெனும் நெடுங்கதையொன்றின் கதை மாந்தர்களினூடாக புலப்படுத்துகிறார்.

‘‘விசாலாட்சி விசாலாட்சி நான் இரண்டு நிமிடங்களுக்கு மேல் உயிருடன் இருக்கமாட்டேன். என் பிராணன்போகும் முன்னர் உன்னிடம் சில வார்த்தை சொல்லிவிட்டுப்போகிறேன். அதை உன் பிராணன் உள்ளவரை மறந்து போகாதே முதலாவது நீ விவாகம் செய்து கொள் விதாவ விவாகம் செய்யத்தக்கது. ஆண்களும் பெண்களும் ஒருங்கே யெமனுக்கு கீழ்படுகின்றார்கள். ஆதலால் ஆண்களுக்கு பெண்கள் அடிமையாய் அஞ்சி ஜீவனுள்ளவரை வருந்தி வருந்தி மடியவேண்டிய அவசியமில்லை. நீ ஆண் மக்கள் எழுதிவைத்திருக்கும் நீசத்தனமான சுயநல சாத்திரத்தைக் கிழித்து கரியடுப்பிலே போட்டுவிட்டு தைரியத்துடன் சென்னை பட்டணத்துக்கு போய் அணுகு கைம்பெண் விவாகத்துக்கு உதவிசெய்யும் சபையினரை கண்டுபிடி அவர்கள் மூலமாக நல்ல மாப்பிள்ளையை தேடி வாழ்க்கைப்படு’’ (பெ.தூரான்: 184-185)

இப்பகுதியில் விதவை விவாகம் பற்றிய செய்திகளும் அதனைச்செய்து கௌ்ள அக்காலத்திலிருந்த வாய்ப்புக்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ‘இந்தியாவிலே விதவைகளின் பரிதாபகரமான நிலைமை’ என்ற கட்டுரையில் விதவைகளின் அவல நிலை பற்றியும் மறுமணவாழ்வின் அவசியம் பற்றியும் பாரதி குறிப்பிட்டுள்ளார்.

அதே வேளை தனக்கு பிடிக்காத மணவாழ்வை முறித்துக்கொள்வதற்கான விவாகரத்து உரிமைகளும் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டுமென பெண்களுக்கு விடுதலைக்கொடுப்பதற்கான

முக்கிய ஆரம்பப்படிகளெனும் அடிப்படை பெண்விடுதலைக் கூறுகளில் ஒன்றாகக்குறிப்பிடுகின்றார் பாரதி குறிப்பிடுகின்றார்.

“விவாகம் செய்து கொண்ட பிறகு அவள் புருஸனை விட்டு நீங்க இடம் கொடுக்க வேண்டும் அதன் பொருட்டு அவளை அவமானப்படுத்த கூடாது”

இவ்வாரான மறுமணம் மற்றும் விவாகரத்து தொடர்பான பாரதியின் எண்ணப்பாட்டினை இஸ்லாமிய நோக்கில் ஆராய்கையில் சுமார் 1400ஆண்டுகளுக்கு முன்பே மறுமணம் பற்றி பேசுகிறது இஸ்லாம்.

“பெண்ணை விவாகரத்து செய்தபின் அவர்கள் தமது காலக்கெடுவை நிறைவு செய்துவிட்டால் அவர்கள் (தமக்குப்பிடித்த) கணவர்களை விருப்பப்பட்டு நல்ல முறையில் மணந்துகொள்வதைத் தடுக்காதீர். உங்களில் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புவோருக்கு இவ்வறிவுரை கூறப்படுகிறது.” (திருக்குர்ஆன் 2:232)

“உங்களில் எவரேனும் மனைவியரை விட்டு மரணித்தால் நான்கு மாதங்களும் பத்து நாற்களும் (மறுமணம் செய்யாமல்) அப்பெண் காத்திருக்கவேண்டும் அக்காலக்கெடுவை நிறைவு செய்துவிட்டால் அவர்கள் தம் விசயமாக நல்லமுறையில் முடிவு செய்வதில் உங்கள்மீது எந்தக்குற்றமுமில்லை. அல்லாஹ் நீங்கள்செய்வதை நன்கறிவான்” (திருக்குர்ஆன் 2:234)

இவ்வாறு பெண் மறுமணம் செய்வது அவளுரிமையென அன்றே கூறியதோடு அதனை நடைமுறைப்படுத்தியும் காட்டியது இஸ்லாம். நபியவர்களின் மனைவிமார்களில் அன்னை ஆயிஸா (ரலி) அவர்களைத்தவிர ஏனைய அனைத்து மனைவியரும் விதவைகளாவர். அதேபோல பெண்கள் விவாகரத்து செய்யும் உரிமையும் இஸ்லாத்தில் பெற்றுள்ளனர். இது ‘குல்உ’ என்றும் அழைக்கப்படுகிறது.

“ஸாபித் பின் கைஸ் பின் ஸம்ஸ் (ரலி) அவர்களின் துணைவியார் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே (என் கணவர்) ஸாபித் பின் கைஸ் அவர்களின் குணத்தையோ மார்க்கப்பற்றையோ நான் குறை கூறவில்லை ஆனால் நான் இஸ்லாத்திலிருந்து கொண்டே இறைநிராகரிப்பு செயலை செய்துவிடுவேனோ என்ற அஞ்சுகிறேன். என்று கூறினார் அப்போது அல்லாஹ்வின் தூதரரவர்கள் ஸாபித் உனக்கு (மணக்கொடையாக) அளித்த தோட்டத்தை நீ அவருக்கு திருப்பி தந்துவிடுகிறாயா என்று கேட்டார்கள். அவர் ஆம் (தந்துவிடுகிறேன்) என்று கூறினார். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் (ஸாபித் அவர்களிடம்) தோட்டத்தை ஏற்றுக்கொண்டு அவளை ஒருமுறை தலாக் சொல்லிவிடுங்கள் என்று கூறினார்.

அறிவிப்பவர் இப்னு அப்பாஸ் (ரலி) (புகாரி :5273)

ஆண்களுக்கு வழங்கிய உரிமைகளில் சற்றும் குறைவில்லாத வகையில் ஒருபெண் தனக்கு கணவனைப் பிடிக்காவிட்டால் உரியவர்களிடம் கூறி இலகுவான முறையில் விவாகரத்து செய்யும் முறையையும் அனுமதியையும் அறியாமைக்காலமான அன்றே இஸ்லாம் வழங்கியிருந்தது.

### 3.**திருமணச்சுதந்திரம்**

ஒரு சமூகத்தில் பெண்ணினது அந்தஸ்த்தை எடுத்துக்காட்டும் அளவு கருவியாக அமைவது விவாகம் குடும்பம் தொடர்பான சட்டங்களும் மரபுகளுமாகும். அந்தவகையில் பாரதி திருமணம் குறித்த தீர்க்கமான கருத்துக்அகண்டிருந்தார். பெண்களின் விருப்பத்திற்கமையவே திருமணம்

நடக்கவேண்டும் என்பதோடு கணவனை தோர்ந்தெடுத்தல் அவர்களது உரிமையென்றார். மேலம் பருவமடையாத பிள்ளைகளை திருமணம் செய்விக்கும் வழக்கத்தையும் எதிர்த்துள்ளார். பாரதி குறிப்பிடும் பெண்விடுதலைக்கூறுகளில் ''பெண்கள் ருதுவாகமுன்பு விவாகம் செய்து கொடுக்கக்கூடாது அவர்களுக்கு இஸ்டமில்லாத புருஸர்களை விவாகம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தக்கூடாது'' என்கிறார். பெண் விடுதலைக்கும்மி பாடலில்

''காதலன் ஒருவனைக் கைப்பிடித்தே

அவன் காரியம் யாவினும் கைகொடுத்து

மாதர் அறங்கள் பழமையைக்காட்டிலும்

மாட்சிப்பெற செய்து வாழ்வோமடி''

இதனடிப்படையில் பெண் தன் சொந்தவிருப்பத்தின் படி பூரணச் சுதந்திரத்துடன் தமக்கேயுரிய கணவனைத்தெரிந்து மணந்து அவன் செயல்களில் பக்கபலமாய் இருந்து முற்காலத்தைக்காட்டினும் சிறந்து வாழவேண்டுமென ஊக்கமூட்டுகிறார்.

இத்திருமணம் சம்பந்தமாக இஸ்லாம் பூரணச்சுதந்திரத்தை வழங்கியதோடு சலுகைகளையும் வழங்கியுள்ளது. கணவனைத்தெரிவு செய்வதிலிருந்து பெண் உரிமைப்பெறுகிறாள். இஸ்லாத்தின் திருமணவிதிகளுள் பருவவயதை அடைந்திருப்பதும் மணப்பெண் மற்றும் மணமகனுக்கு திருமணத்தில் சம்மதம் இருப்பதும் முக்கியமாகும்.

''விதவையோ கண்ணிப்பெண்ணோ அவளது விரும்பமின்றி திருமணம் செய்துவைக்கலாகாது என்பது நபியவர்களின் கட்டளையாகும் இவ்வாறு நபியவர்கள் கூறியபோது அல்லாஹ்வின் தூதரே அவளது சம்மதம் எப்படிப்பெறவேண்டும் என ஸஹாபாக்கள் வினவியபோது நபி (ஸல்) அவர்கள் அவளது மௌனமே அவளது சம்மதமாகும் என்றார்கள்'' (புகாரி அஹ்மத்)

''ஒரு முறை ஒரு கண்ணிப்பெண் நபியவர்களிடம் வந்து தனது தந்தை தனது விருப்பத்திற்கு மாற்றமாக தன்னை ஒருவருக்கு மணமுடித்துவிட்டதாக முறைப்பட்டாள் இதைக்கேட்ட நபியவர்கள் அத்திருமணத்தை அப்பெண்மணியின் தெரிவிற்கே விட்டுவிட்டார்.'' (அபூதாவுத் இப்னு மாஜா)

மேற்கண்ட ஹதீஸ்கள் மூலம் தான் விரும்பாத தனக்கு திருப்தியில்லாத ஒருவரை மணமுடித்துவைக்க முனைகின்றபோது அதனை மறுக்கும் உரிமை பெண்ணுக்குண்டு என்பது புலனாகிறது. ஒரு தகப்பனாக இருந்தாலும் இஸ்லாத்தின் பார்வையில் நிர்ப்பந்தித்து திருமணம் செய்து கொடுக்க உரிமை பெற்றவரல்ல. மேலும் பெண்ணின் திருமண உரிமைகளை இன்னுமொறு படி மேலாக கொடுக்கிறது இஸ்லாம். அதாவது தனக்கு கணவனாகப்போகிறவரிடம் 'மஹர்' எனும் மணப்பெண்ணுக்கான திருமண நன்கொடையை கேட்டுப்பெறும் உரிமையும் பெறுகிறாள். அவள் கேட்பவற்றைக் கொடுத்தே இஸ்லாத்தில் ஒரு ஆண் ஒரு பெண்ணை மணக்கும் உரிமைப் பெறுகிறான். இதனை திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

''பெண்ணுக்கு அவர்களின் மணக்கொடைகளை கட்டாயமாகக் கொடுத்துவிடுங்கள் அவர்களாக மனமுவந்து அதில் எதையேனும் விட்டுத்தந்தால் மனநிறைவுடனும் மனமகிழ்வுடனும் அதை உண்ணுங்கள்'' (திருக்குர்ஆன் 4:4)

அல்லாஹ் அல் குர்ஆனில் மற்றுமொரு இடத்தில்

“பெண்களை வலுக்கட்டாயமாக அடைவது உங்களுக்கு அனுமதியில்லை” ( திருக்குர்ஆன் 4:19) என்கிறான்.

இவ்வாறு பாரதியின் கருத்துக்களுக்கும் கோசங்களுக்கும் பல படி மேலாகவே இஸ்லாம் பதின்நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே பெண்களுக்கான திருமணச்சுதந்திரத்தை வழங்கியுள்ளது.

**4.சொத்துரிமை**

பாரதியின் காலகட்டத்தில் பெண்களுக்கு வீட்டின் உரிமையே மறுக்கப்பட்டு குழந்தைபெரும் இந்திரமாகவே பார்க்கப்பட்டாள். இவ்வுரிமையே மறுக்கப்பட்டவளுக்கு சொத்துரிமை பறிக்கப்பட்டதில் ஆச்சர்யமில்லை. எனவேதான் பாரதி பெண்விடுதலைக் கூறுகளில் ஒன்றாக இதனையும் குறிப்பிடுகின்றார்.

“பிதுரார்ஜத்தில் பெண்குழந்தைகளுக்கு சமபாகம் கொடுக்க வேண்டும்”

சொத்துரிமையின்மை பெண்ணடிமைத்தனத்தின் மூலவேர்களில் ஒன்றாக அமைந்தது. ஆனால் விடுதலைப்பற்றி பேசியோரில் சொத்துரிமை பற்றி பேசியவர்கள் சிலரே. ஆதில் பாரதிமிக முக்கியமானவர். ஆனால் இஸ்லாத்திலோ ஆண் போன்றே பெண்ணும் பல்வேறு பொருளாதாரம்சார்ந்த உரிமைகளைப்பெறுகிறாள். அவற்றில் முக்கியமானது சொத்தரிமையாகும். இதைப்பற்றி திருக்குர்ஆன் குறிப்பிடுகையில்

“ஆண்கள் சம்பாதித்தது ஆண்களுக்குறியதாகும் பெண்கள் சம்பாதித்தது பெண்களுக்குறியதாகும்” (திருக்குர்ஆன் 4:32)

வாரிசுச்சொத்திலும் பெண் பராபட்சமின்றி உரிமைப்பெறுகிறாள்.

“குறைவாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும் பெற்றோரும் உறவினரும் விட்டுச் சென்றவற்றில் ஆண்களுக்கும் பங்குண்டு பெற்றோரும் உறவினரும் விட்டுச் சென்றவற்றில் பெண்களுக்கும் பங்குண்டு” (திருக்குர்ஆன் 4:7)

இதுபோன்றே பாகப்பிரிவினைப்பற்றி தெளிவான விளக்கமும் முறையும் ஸூரா அல் பகராவில் முழுமையாகத்தரப்பட்டுள்ளது. இஸ்லாத்தில் ஆண்களுக்கு இருபங்கும் பெண்களுக்கு ஒருபங்குமென கூறப்பட்டிருப்பதன் நோக்கம் குடும்பச்சுமைகள் மற்றும் திருமணத்திற்கு மஹர் வழங்கும் தேவைப்பாடும் கருத்திற்கொண்டு நூட்பமான முறையில் பாகப்பிரிவினைக்கு வழிகாட்டப்பட்டுள்ளது.

**5.விரும்பிய தொழில் செய்யும் உரிமை**

அவரவர் திறமைக்கேற்ப எத்தகைய தொழில்களிலும் ஈடுபடலாமென்பது பாரதியின் மற்றுமொரு கோசமாகவிருந்தது. பெண்களை வீட்டைவிட்டே வெளியேற்ற விரும்பாத அவர்களுக்கு பாரதியின் கருத்து புதுமையாகவும் நவீனமாகவுமேயிருந்தது. பெண் விடுதலைக்கூறுகளில் ஒன்றாக

“விவாகமே இல்லாமல் தனியாகயிருந்து வியாபாரம் கைத்தொழில் முதலியவற்றால் கௌரவமாக ஜீவிக்கவிரும்பும் ஸ்தீரிகளை யதேச்சையாக தொழில்செய்து ஜீவிக்க இடங்கொடுக்கவேண்டும்” என்பதோடு பெண் விடுதலைக்கும்மி பாடலிலும் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்

நட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்

இளைப்பில்லை காணென்று கும்மியடி''

இஸ்லாத்தின் பார்வையில் கணவனே மனைவி மற்றும் குழந்தைகளுக்கு பொறுப்புதாரியாகிறான். அவனின் சுமையை பங்கீடுசெய்யும் வகையில் இஸ்லாமிய வரையரைகளோடு பெண் தொழில்செய்ய அனுமதிக்கப்படுகிறாள். நபியவர்களின் மனைவிமார்களுள் ஒருவரான அன்னை கதீஜா (ரலி) பெரியளவில் வணிபம் செய்பவர்களாக இருந்தார். ஒருபெண் விதவையான நிலையில் நபியவர்களிடம் வாழ்வாதாரத்திற்கு அனுமதிகோர அவர்கள் அதற்க அனுமதியளித்தார்கள். இன்று கல்வித்துறை மருத்துவத்துறைகளில் பெண்களின் பங்களிப்பு அதிகளவில் அவசியப்படுகிறது.

**6.அரசியற்சுதந்திரம்**

பாரதியின் மற்றுமொரு எதிர்பார்ப்பே அரசியலில் பெண்கள் பங்கெடுக்கவும் பதவிகள் வகிக்கவும் வேண்டுமென்பதாகும். பெண் விடுதலைக் கூறுகளில் இதைக்குறிப்பிடுகையில்

''தமிழ் நாட்டில் ஆண்மக்களக்கே ராஜரீக சுதந்திரம் இல்லாமலிருக்கையிலே அது பெண்களுக்கும் வேண்டுமென்று இப்போது கூறுதல் பயனில்லை. எனினும் சீக்கிரத்திலே தமிழருக்கு ராஜ்யம் கிடைக்கும் அப்போது பெண்களுக்கு ராஜாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்க வேண்டும்'' என்கிறார்.

பாரதி பெண் விடுதலைப் பாடலில் அரசியலில் பெண்களுக்கிருக்கும் பங்கை பின்வருமாறு குறிப்பிடுகிறார்

''சிறுமை தீர நற் தாய்திரு நாட்டைத்

திரும்ப வெல்வதில் சேர்த்திங் குழைப்போம்''

விடுதலைக் கும்மியில்

''வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்

வேண்டி வந்தோம் என்று கும்மி அடி

சாகம் படைக்கவும் செய்திடுவோம்

தெய்வ சாதி படைக்கவும் செய்திடுவோம்''

இவ்வாறான பாரதியின் வரிகள் வீட்டிலும் நாட்டிலும் ஆட்சிப் பட்டங்களைப் பெற்று பணிகள் செய்வதற்கும் சட்டங்கள் ஆக்குவதிலும் ஆண்களுக்குப் பெண்கள் சமமே என்று நீதி நிறுவனங்களைப் பரிபாலனம் செய்வதிலும் சம பங்கை ஏற்கக் பெண்கள் தயாராக வேண்டுமென்று குறிப்பிடுகின்றார்.

இக்கருத்தை இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஆராய்கையில் தலைமைத்துவப் பொறுப்பு அதிக கனமிக்கது அதை பெண்களின் தலையில் சுமத்துவதானது குருவியின் தலையில் பனங்காயைப் போன்றதாகும். அது தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதை இஸ்லாம் ஊக்கப்படுதியுள்ளது. நபி (ஸல்) அவர்கள் காலத்தில் வீரப்பெண்மணிகள் தம் மார்க்கத்திற்காக போரில் கலந்து எதிரிகளின் தலைகளை கொய்திருக்கிறார்கள். உம்மு ஸுலைம் (ரலி) அவர்கள் உஹத் போரிலும் கன்ஸா பின்த் அம்ர் (ரலி) கதிஸிய்யா போரிலும் கலந்து கொண்டனர். இவ்வாறு எத்தனையோ வரலாற்று

சம்பவங்கள் காணப்படுகின்றன. ஓரு முறை உமர் (ரலி) அவர்கள் தம் சபையில் பெண்களுக்கு வழங்கும் மஹர் தொகையை குறைத்துக் கொள்ளப் போகிறேன் என்றார். அதற்கு சபையிருந்த பெண்மணியொருவர் எழுந்து பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை ஓதிக்காட்டினார்.

" ஒரு மனைவியை விவாகரத்து செய்து இன்னொருத்தியை மணந்து கொள்ள நீங்கள் விரும்பினால் அவளுக்கு ஒரு குவியலையே கொடுத்திருந்தாலும் அதில் எதையும் பிடுங்கிக் கொள்ளாதீர்கள்" (அல்குர்ஆன் 2: 4: 20)

இவ்வாறு குவியல் குவியலாக மஹர் கொடுக்க கூறியிக்கும் வேலையில் அதை குறைக்கப் போவதாக சொல்வது நியாமா என்று அப்பெண்மணி கேட்க உமர் (ரலி) அவர்கள் தன் கருத்தை வாபஸ் பெற்றார்கள்.இவ்வாறு உமர் (ரலி) எவ்வளவு பெரிய கலிபாவாக இருந்தும் சபையில் அப்பெண்ணின் கருத்துக்கு செவிசாய்த்தார்கள் அப்பெண்ணும் சபையில் சட்டம் கூறும் அனுமதி பெற்றிருந்தாள் என்பது தெளிவு.

இவ்வாறு இஸ்லாம் பெண்களுக்கு அரசியல் பங்கேற்பு ரீதியில் சொல்லில் மாத்திரம் இன்றி செயலிலும் நிறுபித்துக் காட்டியது இஸ்லாம். ஜமல் யுத்தம் ஆயிஷா நாயகியின் தலைமையில் நடந்தது. ஹுதைபிய உடன்படிகையின் போது ஆயிஷா நாயகியிடமே நபியவர்கள் ஆலோசனை கேட்டார்கள்.

**ஆண் பெண் சமத்துவம்**

பாரதியின் கருத்துக்களில் பெரும்பான்மையாக பிரதிபளித்த விடயம் ஆண் பெண் சமத்துவமேயகும். ' தமிழ் நாட்டின் விழிப்பு' என்ற கட்டுரையில்

"ஸ்திரிகளுக்கு ஜீவன் உண்டு மானம் உண்டு புத்தியுண்டு ஐம்புலன் உண்டு அவர்கள் செத்த இயந்திரங்கள் அல்லர். உயிருள்ள செடி கொடிகளைப் போலவுமல்லர். சாதாரண ஆண் மாதிரியாகவே தான் புறவுறுப்புக்ககளில் தான் மாறுதல் ஆத்மா ஒரே மாதிரி" என்கிறார். ஆண்களும் பெண்களும் மனித பிறப்பு என்ற வகையில் எவ்விதத்திலும் உயர்ந்தோ தாழ்ந்தோ விடவில்லை ஆனால் இருவருக்குமிடையில் உடலியல் ரீதியான வேறுபாடுகள் உண்டு அதாவது வேறுபாடு ஆனால் சமத்துவம் (னகைகநசநவெ டிரவ நஙரயட ) . புதுமைப்பெண்ணில் பாரதி,

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதனால்

அறிவி லோங்கி இவ் வையம் தலைக்குமாம்" என்கிறார்.

இவ்வாறு சமத்துவம் பேசும் பாரதி சமத்துவம் இன்மையே உலக சீர்கேடுகளுக்கு முக்கிய காரணம் என்கிறார். கற்பு பற்றிய நோக்கிலும் பாரதி சமத்துவம் பேசுகிறார்.

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார் இரு

கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

கண்ணியத்துக்கான அளவுகோளாக கொள்ளப்படும் கற்பு பெண்ணுக்கு மாத்திரமின்றி ஆணுக்கும் உண்டு அவனும் அதை பேணுதல் வேண்டுமென்கிறார். இவ்வாறான ஆண் பெண் சமத்துவம் சிறந்த முறையில் கண்ணியமாக பேணப்பட வேண்டும். ஆனால் இன்று பல பெண்ணிய இயக்கங்கள் இதற்கு ஒரு படி மேல் சென்று அனாச்சர சீர் கேடுகளுக்கு உள்ளாக்கும் விடயங்களையெல்லாம் பாவம் எனாமல் சுதந்திரம் என்கின்றனர். அதிலொன்றே (கசநந டழளந) சுதந்திரக்காதல் ஆண் பெண்

உறவில் கட்டற்ற சுதந்திரம் வேண்டுமென்று பேசப்பட்டது. இக் கொள்கையை பாரதி வெறுத்தார் ‘அறுபத்தாறு’ என்ற நீண்ட கவிதையில் ‘விடுதலைக்காதல்’ என்ற உபதலைப்பில் சில கருத்துக்களை கூறியுள்ளார்.

“ வீரமிலா மனிதர் சொலும் வார்த்தை கண்டீர்

விடுதலையாங் காதலெனில் பொய்மைக் காதல்”

என்று குறிபிட்டார். இவ்வாறு ஆண் பெண் சமத்துவத்தில் பாரதியின் நிலைப்பாட்டை இஸ்லாமிய நோக்கில் சீர் தூக்கின் இஸ்லாத்தை பொறுத்தவரையில் அல்குர்ஆனும் நபிகளாரின் வழிமுறையுமே வாழ்க்கைக்கான பிரதான வழிகாட்டி இதில் ஆண்களும் பெண்களும் உரிமைகளையும் கடமைகளையும் சமமாக அனுபவிக்க வேண்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் அற்ற மிக தெளிவான விதிகளைக் கொண்டுள்ளது.

“ ஆண் அல்லது பெண் விசுவாசம் கொண்டவராக இருக்க யார் நற்கருமங்களை செய்தாரோ நிச்சயமாக அவரை நல்ல வாழ்க்கையில் வாழச் செய்வோம் இன்னும் நிச்சயமாக அவர்களுக்கு அவர்களுடைய கூலியை அவர்கள் செய்து கொண்டதில் மிக அழகானதை கொண்டு நாம் கொடுப்போம்.” (அல்குர்ஆன் 16: 97)

இவ்வசனமானது இறைவனிடத்தில் அனைவரும் சமம் அவரவரின் செயலுக் கேற்ப வெகுமதிகள் எவ்வித பாரபட்சமின்றி கிடைக்கும் என்பதற்கான சான்றாகும்.

“உங்களில் ஆணோ பெண்ணோ எவரது செயலையும் நான் வீணாக்க மாட்டேன் என்று அவர்களது இறைவன் அவர்களுக்கு பதிலளித்தான்” (அல்குர்ஆன் 3 :195)

இவ்வாறு சமத்துவம் பேசும் இஸ்லாம் கற்பு விடயத்திலும் ஆணுக்கும் கற்புண்டு அவனும் அதை பேண வேண்டுமென்பதில் கண்டிப்புடனிருக்கின்றது.

“தமது பார்வையை தாழ்த்திக்கொள்ளுமாறும் தமது கற்பை பேணிக்கொள்ளுமாறும் நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கு நீர்கூறுவீராக இது அவர்களுக்கு பரிசுத்தமானது” (திருக்குர்ஆன் 24:30)

ஆண்களுக்கான உபதேசத்தின் பின்பே கற்பு சம்பந்தமாக பெண் உபதேசிக்கப்படுகிறாள். இவ்வாறே இஸ்லாத்தில் பெண்களுக்கு உரிமைகள் இருப்பது போன்றே கடமைகளும் இருக்கின்றன. சில விடயங்களில் ஆண் பொறுப்புதாரியாவது போன்றே பெண்ணும் வீட்டுப்பராமரிப்பு குழந்தை வளர்த்தல் போன்றவற்றில் பொறுப்புதாரியாகிறாள்.

**முடிவுரை**

காலனித்துவ ஆட்சியும் அதிலிருந்துவிடுபட போராட்டங்களும் வலுப்பெற்றகாலத்தில் விடுதலையுணர்வை மூச்சாகக்கொண்டு பாடிய பாரதியின் பாடுபொருளில் முக்கியகூராக பெண்விடுதலைக்கருத்துக்களும் அமைந்தது. 1882யில் பிறந்து 1921 வரை இன்றிலிருந்த கிட்டத்தட்ட 136 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அவர் தன் காலத்து பெண்களின் அடக்கிஒடுக்கிய நிலைகண்டு எழுதிய கருத்துக்கள் அவரால் முன்வைக்கப்பட்ட பல பெண் விடுதலைக்கூறுகளும் தீர்வுகளும் பலவகையிலும் நவீனமடைந்த இன்றுவரை ஏட்டளவிலே உள்ளன.

ஆனால் கி.பி.7ம் நூற்றாண்டில் கிட்டத்தட்ட இன்றிலிருந்து 1400வருடங்களுக்கு முன்பு பரவிய இஸ்லாம் மார்க்கமோ பெண்குழந்தைகளை உயிருடன் புதைத்த அக்காலகட்டத்திலயே

அவளுக்கான சொத்துரிமை பேசுமளவு பெண்களுக்கான முன்னுரிமையை வழங்கியுள்ளது.இஸ்லாத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் குழந்தை தன் தந்தையைவிட தாய்க்கு முன்னுரிமை வழங்குவதில் கடமைப்பட்டுள்ளது. இஸ்லாத்திலே பெண்ணுரிமைக்கான சட்டம் இயற்றப்பட்டதோடு நின்றுவிடாது அவை செயற்படத்தியும் காட்டப்பட்டதோடு மறுக்கும் பட்சத்தில் தண்டனையும் வழங்கப்படும். இன்றுவரை பெண்விடுதலைக்காய் முற்போக்காய் செயற்பட்டவர்களுள் பாரதியே தமிழர்கள் மனதில் நின்று நிலைப்பனாலயே பாரதியின் கருத்துக்களோடு இஸ்லாமிய பெண்ணுரிமைக்கருத்துக்களை இஸ்லாமிய கண்ணோட்டத்தோடு ஆராய வேண்டியதாயிற்று.

**உசாத்துணைகள்**


1.அப்துல் ஹமீது பாகவி ,ஆ.க. (1999). சங்கைமிபு புர்ஆன் சிறப்புமிகு தமிழாக்கம். சென்னை. தாருல்ஹுதா குவாலிடி இஸ்லாமிக் புக் பப்ளிஸர்.

2.கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், (2009). பாரதியின் கன்னிக்குயிலின் இன்னிசைப்பாட்டு. கொழும்பு,குமரன் அச்சகம்.

3.சித்திரலேகா மௌனகுரு,(1996). பாரதியின் பெண்விடுதலை இலக்கியம்-கருத்து-காலம். மட்டக்களப்பு,விபுலம் வெளியீடு.

4.மூர்த்தி,வை.ஏ. (1961).பாரதிபாடல்கள் உரைவிளக்கம். யாழ்ப்பாணம்,சண்முகதாஸ் புத்தகசாலை.

5.தூரான்,பெ. (1953). பாரதி தமிழ் (தொகுப்பு). .சென்னை.

6.அஸ்ஸெய்க் அகார் முஹம்மத். (2008,ஆகஸ்ட் 28). பெண்களின் உரிமை ஓர் இஸ்லாமிய நோக்கு. [Online] : Available: http://www.sheikhagar.org/articles/archives1/61-pengalinurimaigal.,(accsess)

7.நஸ்லின் றிப்கான் அன்ஸார். (2016.03.08). பெண்கள் சமுதாயத்தின் கண்கள்(சர்வதேச மகளிர் தினக்கட்டுரை).[ online ] : Available : http://srilankamuslim.lk/பெண்கள்-சமுதாயத்தின்-கண/. '(accsess)

8.பேராசிரியர் கோபன் மகாதேவா,திருமதி சீதாதேவி மகாதேவா. (2016.02.09). ஆய்வு: பாரதியின் பெண்ணுரிமைக்கவிதைகள். [online]: Available: http://www.geotamil.com/pathivukalnew/index,php?option=com_content&view=article&id=3109:2016-01-20-11-22&catid=2:2011-02-25-12-52-49&ltemid=19.'(accsess)

9.மகாகவி பாரதியார். (2007) மகாகவி பாரதியார் கவிதைகள். [online]: Available: http://www.lakshmansruthi.com/tamilbooks/bharathiar/.'(accsess)

10.ஜ.எல்.எம்.அஸ்வர். (2013.04.09). இஸ்லாத்தில்பெண்கள் நிலை. [Online]: Available: http://www.jaffnamuslim.com/2013/04/blog-post-1389.html?m=

11.இப்ராஹிம் அன்சாரி, (2015) சர்வதேச பெண்கள் தின சிந்தனைகள். [Online]: Available: www.adirainews.net/2015/03/blog-post_90.html?m=1